00221

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 3
இறுதிப் பரீட்சை- 2021/2022

**LLU3502/LWU1202 – ஒப்புரவு கொள்கைகள்**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 23 ஜனவரி 2023 காலம் : மு.ப 9.30 – பி.ப 12.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை 08.

பகுதி ஒன்றில் இருந்து ஒரு (01) வினாவை தெரிவு செய்தும் பகுதி 2 இல் இருந்து நான்கு (04) வினாக்களை தெரிவு செய்தும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி I – ஒப்புரவு கொள்கைகள்

இப்பகுதியில் இருந்து ஒரு (1) வினாவுக்கு மட்டும் விடை தருக.

1. ஆங்கில சட்டத்தில் ஒப்புரவின் வரலாற்று ரீதியான வளர்ச்சி மற்றும் அதனுடைய தற்போதைய கோட்பாடுகள் என்பவற்றின் பின்னணியில் பின்வரும் கூற்றின் மீது கருத்துரைக்க.

   " உரிமைகள் தொடர்பாக, குறிப்பாக ஆதன உரிமைகள் பற்றி தீர்மானிக்கையில் தவறுமைத்த மற்றும் அனைத்தும் அறிந்தவர்களாக இருக்கின்ற மனிதர்களால் அடையக்கூடிய நீதி சட்டத்துக்கு அமைவான நீதியேயாகும்; நிட்சயமான மற்றும் சமரசம் செய்யப்பட்ட எண்ணக்கருக்களின் பிரயோகத்தில் இருந்து தோன்றுகின்ற நீதியானது எண்பிக்கப்பட வேண்டும். எனவே ஒப்புரவு துறையில் சான்சரியுடைய தலையீட்டின் நீளமானது அளவிடப்பட்டது அல்லது அளவிடபடக்கூடியதாகும். இதன் மூலம் ஒப்புரவு அதனுடைய பலனை கடந்து விட்டது என்ற அர்த்தம் கொள்ள முடியாது. சாதரணமாக குறிப்பிடுவதானால் ஒப்புரவின் சந்ததி முற்தீர்ப்புக் கொள்கைகள் மூலம் நெறிமுறையாக இருத்தல் வேண்டும். இவ்வாறு அமைய வேண்டும் என்பது நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். அவ்வாறு அல்லாத பட்சத்தில், எந்தவொரு சட்டத்தரணியும் தனது வாடிக்கையாளருடைய தற்கிழமை தொடர்பாக பாதுகாப்பான அறிவுரையை வழங்க முடியாததுடன் ஒவ்வொரு சர்ச்சையும் நீதிமன்ற வழக்கொன்றிற்கு செல்ல வழியேற்படுத்தும்."

   *Cowcher* V *Cowcher* (1972)1 All ER 934 at 948

   (20 புள்ளிகள்)

2. ஒப்புரவு முதுரைகள் ஒப்புரவு சட்டங்களாகவன்றி, தீர்ப்புகளை வழங்கும் போது சான்சரி நீதிமன்றங்களை செல்வாக்கு செலுத்திய வழிகாட்டிகளாவே மதிக்கப்படல் வேண்டும்"

   மேலே தரப்பட்ட கூற்றின் மீது கருத்துரைக்க.

   (20 புள்ளிகள்)

## பகுதி II – நம்பிக்கைகள் சட்டம்

இப்பகுதியில் இருந்து நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.

3. கவிந்து தனது 12 வயது நிரம்பிய மகளான மிஹிரியின் நலனுக்காக வலிதான நம்பிக்கையொன்றை உருவாக்க விரும்புகிறார். கவிந்து சட்ட ரீதியாக

   (அ) தனது 14 வயது மகனை நம்பிக்கையாளராக நியமிக்க முடியுமா

(ஆ) நொத்தாரிசு மூலமாக நிறைவேற்றுவதில் அதிக செலவீனம் ஏற்படும் என்ற காரணத்தால் நொத்தாரிசு நிறைவேற்றல் அன்றி தனது இறப்பர் தோட்டம் தொடர்பாக நம்பிக்கை உறுதியொன்றை நிறைவேற்ற முடியுமா

(இ) மிஹிரியுடைய கல்விக்கு உதவும் வகையில் தனது வங்கி வைப்பில் பெருந்தொகையை ஒதுக்க முடியுமா

(ஈ) மிஹரியுடைய பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் நலனுக்காக தனது சகோதரன் சமீரவுக்கு ரூபா.10 மில்லியனை வழங்க முடியுமா

நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றுடன் உமது விடை ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள்)

(4 x 5 = 20 புள்ளிகள்)

4. "தர்ம நம்பிக்கை தொடர்பான சட்ட வரைவிலக்கணங்கள் ஆங்கில மற்றும் இலங்கை சட்டங்களின் கீழ் அடிப்படையில் ஒத்தவையாக அமைகின்றன, பொதுமக்கள் நலன் என்ற அம்சத்தில் எமது சட்டம் விசேடமாக பரந்துபட்டதாகும். தர்ம நம்பிக்கையொன்றில் பொருத்தமான பயனாளிகள் என இங்கிலாந்தில் கருதப்படுவதை விட சிறிய சமூகத்தை சேர்ந்தவர்களை பயனாளிகளாக கருதுவதற்கு இலங்கை நீதிமன்றங்கள் தயாராகவுள்ளன."
இயைபான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்துடன் மேலே தரப்பட்ட கூற்றை விமர்சித்து மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

5. ஹிக்கடுவையில் உள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரான பசிந்துவுக்கு மகன் ஒருவன் இருந்தான். பசிந்து மருத்துவ பரிசோதனை ஒன்றுக்காக தனது வைத்தியரிடம் சென்றான். மதுபாவனை காரணமாக பசிந்துவுடைய நுரையீரல் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் அவனுக்கு அறிவித்தார். பசிந்து மருத்துவ பரிசோதனையை கருத்தில் எடுத்ததுடன் தனக்கு மரணம் ஏற்படும் என்ற அச்சத்தின் காரணமாக தனது ஹோட்டலை சகோதரான ரவிந்துவுக்கு கைமாற்றம் செய்தான். ஒரு வாரத்தின் பின்பு, பசிந்துவுக்கு வைத்தியர் அழைப்பு விடுத்து, இன்னுமொரு நோயாளியுடைய வைத்திய அறிக்கையுடன் பசிந்துவுடைய அறிக்கை கலந்து விட்டமைக்காக மன்னிப்பு கோரினார். அதன் பின்பு, பசிந்து தனது ஹோட்டலை மீள கைமாற்றம் செய்யுமாறு ரவிந்துவை வேண்டினார். ரவிந்து ஹோட்டலை மீள கைமாற்றம் செய்ய மறுத்தான்.

(அ) நம்பிக்கைகள் கட்டளைச் சட்டம் மற்றும் தீர்ப்புச் சட்டத்தின் அடிப்படையில் பசிந்துவுக்கு ஆலோசனை வழங்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) ரவிந்துவுக்கு பதிலாக தனது மகனுக்கு ஹோட்டலை பசிந்து கைமாற்றம் செய்திருந்தால் உமது விடை வேறுபடுமா?

(08 புள்ளிகள்)

6. "இடைவெளி ஒன்று ஏற்படுகின்ற போது ஆங்கில சட்டத்தை பிரயோகிப்பதற்கு இல 09, 1917 ஆம் ஆண்டின் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 02 அனுமதிக்கின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் ஆங்கிலச்சட்டம் பிணிக்கும் தன்மை கொண்டதாக அமையுமே அன்றி தூண்டுவிக்கும் அதிகாரம் கொண்டதாக அமையாது என்பதை நினைவில் வைத்திருத்தல் அவசியமாகும். இல 09, 1917 ஆம் ஆண்டின் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் எந்தவொரு ஏற்பாடும் குறிப்பிட்ட சூழ்நிலையொன்றில் கட்டளைச்

சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் இடைவெளி ஒன்று ஏற்படாத போது பிரயோகிக்கப்படாது என்பது பற்றிய நிட்சயத்தன்மையை ஒருவர் கொண்டிருத்தல் வேண்டும்"

மேலே தரப்பட்ட கூற்றை நுணித்தாராய்க.

(20 புள்ளிகள்)

7. பியல் தனது 40 ஏக்கர் தேயிலை தோட்டம் மற்றும் நுவரெலியாவில் உள்ள ஹோட்டல் ஆகிய இரண்டிற்கும் அமல் என்பவனை நம்பிக்கையாளனாக நியமித்தான். தனது மகள்மார்களான விமாலி மற்றும் கமாலி ஆகியோர் பராய வயது எல்லையை அடையும் வரை தனது சொத்துக்களை பராமரிக்கும் பொறுப்பை அமலுக்கு பியல் வழங்கினான். விமாலி 12 வயதாகவும் கமாலி 16 வயதாகவும் இருந்த வேளை பியல் இறந்தான். அமல் நுவரெலியாவில் உள்ள தேயிலை தோட்டத்திற்கு சென்று வர கார் ஒன்றை வாடகைக்கு அமர்த்தியதுடன் ஒவ்வொரு பிரயாணத்திற்கும் ரூபா.30,000/= ஐ செலவு செய்தான். அமல் நுவரெலியா செல்ல புகையிரத வண்டியை பயன்படுத்தி இருந்தால் ஒரு தடவை பிரயாணத்திற்கு ரூபா.2500/= ஐ மாத்திரமே செலவு செய்திருப்பான். விமாலி 18 வயதை அடைந்த போது, ஹோட்டலை விற்குமாறும் விற்பனை பணத்தில் இருந்து தனக்கு உரித்தான பகுதியை தருமாறும் கோரிக்கை விடுத்தாள். இதேவேளை, அமல் தேயிலை தோட்டத்தில் இருந்து 5 ஏக்கர் பகுதியை பிமால் என்பவருக்கு ரூபா.3 மில்லியனுக்கு விற்பனை செய்தான். விற்பனை செய்யப்பட்ட 5 ஏக்கர் காணியின் தற்போதைய மதிப்பிடப்பட்ட சந்தை விலை ரூபா.5 மில்லியன் ஆகும். விமாலி இவ்விற்பனை தொடர்பாக அறிந்திருப்பினும் அதனை தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அமல் சொத்துக்களை விமாலி மற்றும் கமாலிக்கு கைமாற்றம் செய்ய சட்டத்தரணி ஒருவரின் ஆலோசனையை பெற்றான். அவன் சட்டத்தரணியின் ஆலோசனையைப் பெற ரூபா.15,000/= ஐ சட்டத்தரணிக்கு கட்டணமாக தனது சொந்த பணத்தில் இருந்து செலுத்தினான். இந்த தீர்மானங்கள் மற்றும் கைமாற்றங்கள் என்பன பற்றி அறியக்கிடைத்த கமாலி உமது ஆலோசனையை நாடுகிறாள். நம்பிக்கைள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பின்னணியில் அவளுக்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றில் இருந்து ஏதேனும் இரண்டின் (02) மீது குறிப்பெழுதுக.

(அ) இல 06, 2018 ஆம் ஆண்டின் நம்பிக்கைகள் (திருத்தச்) சட்டம்

(ஆ) நம்பிக்கைகளில் காலவரையறைக்கு எதிரான விதி

(இ) ஒப்புரவு நிவாரணம் என்ற வகையில் குறித்து நிறைவேற்றல்

(ஒவ்வொரு பகுதிக்கும் 10 புள்ளிகள்)

(10 x 02 = 20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது